உ
சிவமயம்

அகில இலங்கை இந்து மாமன்றம்
இறைபணிநிற்க

# அகில இலங்கை இந்து மாமன்றம்

(இலங்கை இந்துமன்ற அமைப்புகளினதும் ஆலய நம்பிக்கை பொறுப்புகளினதும் கூட்டமைப்பு)

# ALL CEYLON HINDU CONGRESS

(Federation of Hindu Religious Association and Trusts in Sri Lanka)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அகில இலங்கை இந்து மாமன்ற நடுத்தீர்ப்பு மையம்

ஓர் இந்து ஆலயம் அல்லது இந்து சமய நிறுவனம் அவற்றின் நம்பிக்கைப் பொறுப்பு தொடர்பாக ஏதேனும் பிணக்குகள் இருப்பின் அப்பிணக்கினை ஆற்றுப்படுத்தும் நோக்குடன் அகில இலங்கை இந்து மாமன்றம் "நடுத்தீர்ப்பு நிலையம்" ஒன்றினை நிறுவியுள்ளது என்பதை சகலருக்கும் அறியத்தருகின்றோம்.

அகில இலங்கை இந்து மாமன்ற நடுத்தீர்ப்பு விதிகளுக்கமைய இந்து நடுத்தீர்ப்பாளர்கள் எதுவித கட்டணமுமின்றி விசாரணைகளை நடாத்தி நடுத்தீர்ப்பு வழங்குவார்கள். இது சம்பந்தமாக விதிமுறைகளோ, அல்லது வேறு விளக்கங்களோ தேவைப்படுவோர் அகில இலங்கை இந்து மாமன்றத்துடன் நேரிலோ, கடிதமூலமோ அல்லது 011-2434990 தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளலாம். எனினும் நடுத்தீர்ப்பு மையத்தின் விசாரணைகளுக்காக சம்பந்தப்பட்ட சகல தரப்பினரும் தமது சம்மதத்தை எழுத்துமூலம் சமர்ப்பிக்க வேண்டும்.

இந்து ஆலயம், இந்து சமய நிறுவனங்கள் தமது பிணக்குகளை நீதிமன்றங்களுக்கு எடுத்துச் செல்லவேண்டிய அவசியமில்லை. இந்து சமய அறிவுசார்ந்த நடுத்தீர்ப்பாளர்கள் பிணக்குகளை விரைவாகவும் இலகுவாகவும் தீர்த்துவைப்பார்கள்.

**தலைமைக் காரியாலயம்**

அகில இலங்கை இந்து மாமன்றம்
A.C.H.C,
91/5, சேர் சிற்றம்பலம் ஏ.கார்டினர் மாவத்தை,
கொழும்பு – 02.
தொலைபேசி – 011-2434990

அகில இலங்கை இந்து மாமன்றம்
யாழ் பணிமனை,
211/17, கோவில் வீதி,
நல்லூர்,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி – 021-2221075

**கந்தையா நீலகண்டன்**
பொதுச் செயலாளர்
அகில இலங்கை இந்து மாமன்றம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அகில இலங்கை இந்துமாமன்ற நடுத்தீர்ப்பு நிலையம்
# நடுத்தீர்ப்பு விதிகள்

ஏதேனும் உடன்படிக்கை, சமர்ப்பணம் அல்லது ஆற்றுப்படுத்துகையானது, ஓர் இந்து ஆலயம் அல்லது இந்து சமய நிறுவனம் அல்லது நம்பிக்கைப்பொறுப்பு தொடர்பான ஏதேனும் பிணக்கினை,[X] அகில இலங்கை இந்துமாமன்ற நடுத்தீர்ப்பு நிலையத்தின் ("அ.இ.இ.ந.நி.") விதிகளின் கீழ் நடுத்தீர்ப்புக்கு ஆற்றுப்படுத்துவதற்கு ஏற்பாடு செய்கின்றபோது, சம்பந்தப்பட்ட திறத்தவர்கள் பின்வரும் விதிகளுக்கு அமைவாக அல்லது குறித்த நடுத்தீர்ப்பு ஆரம்பிக்கப்பட முன்னர் அ.இ.இ.ந.நி. ஆல் ஏற்றுக்கொள்ளப்பட்ட திருத்தப்பட்ட விதிகளிற்கு அமைவாக குறித்த நடுத்தீர்ப்பானது நடாத்தப்படுவதனை ஏற்றுக்கொண்டு சம்மதித்ததாகக் கொள்ளப்படும்.

## 1. நடுத்தீர்ப்புக்கு ஆற்றுப்படுத்தல்.

1.1 ஓர் ஒப்பந்தத்தின் திறத்தவர்கள் அவ் ஒப்பந்தம் தொடர்பான பிணக்குகள் "அ.இ.இ.ந.நி. நடுத்தீர்ப்பு விதிகள்" எனக் குறிப்பிடப்படுகின்ற அகில இலங்கை இந்துமாமன்ற நடுத்தீர்ப்பு நிலையத்தின் விதிகளின் கீழ் நடுத்தீர்ப்புக்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டும் என எழுத்து மூலம் சம்மதித்துள்ளபோது, அத்தகைய பிணக்குகள் திறத்தவர்கள் எழுத்து மூலம் சம்மதிக்கும் ஏதேனும் மாற்றங்களுக்கு ஏற்ப அவ்விதிகளுக்கு அமைவாக தீர்க்கப்பட வேண்டும். அத்தகைய உடன்பாட்டை பின்பற்ற விரும்புவோரின் வசதிக்காக மாதிரி நடுத்தீர்ப்பு வாசகம் ஒன்று இதன் கீழ்க்காணும் அட்டவணை 1 இல் வழங்கப்பட்டுள்ளது.

X - 1995 ம் ஆண்டின் 11ம் இலக்க நடுத்தீர்ப்புச் சட்டத்தின் பிரிவு 4 ஐப் பார்க்கவும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1.2 இவ் விதிகளின் கீழ் ஒரு நடுத்தீர்ப்பை ஆரம்பிக்க விரும்பும் ஏதேனும் ஒரு திறத்தவர் ("கோரிக்கையாளர்") நிலையத்தின் பதிவாளருக்கு ("பதிவாளர்") பின்வரும் விடயங்களையும் உள்ளடக்கி அல்லது இணைத்து நடுத்தீர்ப்புக்கு ஆற்றுப்படுத்துகைக்கான ஒரு எழுத்துமூல கூற்றினை ("ஆற்றுப்படுத்துகை") (4 பிரதிகளில்) அனுப்ப வேண்டும்.

(அ) நடுத்தீர்ப்புக்கு வரும் திறத்தவர்களின் முழுப்பெயர்கள் மற்றும் முகவரிகள்.

(ஆ) பிணக்கின் தன்மை மற்றும் சூழ்நிலைகள் பற்றி விளக்கும் ஒரு சுருக்கமான கூற்று.

(இ) நடுத்தீர்ப்பை நடாத்துதல் சம்பந்தமாக திறந்தவர்கள் ஏற்கனவே சம்மதித்துக்கொண்ட அல்லது கோரிக்கையாளர் முன்மொழிய விரும்புகின்ற ஏதேனும் விடயங்கள் (நடுத்தீர்ப்பு நடாத்தப்படும் இடம் அல்லது மொழி அல்லது நடுத்தீர்ப்பாளர்களின் எண்ணிக்கை அல்லது அவர்களின் தகைமைகள் அல்லது அடையாளங்கள் போன்ற விடயங்கள்) பற்றிய ஒரு கூற்று.

(ஈ) எவ் உடன்படிக்கையின் கீழ் திறத்தவர்கள் பிணக்கினை நடுத்தீர்ப்புக்கு சமர்ப்பிப்பதற்கு சம்மதித்துள்ளனரோ அவ் உடன்படிக்கையின் ஒரு பிரதி.

(உ) கோரிக்கையாளரால் ஒரு நடுத்தீர்ப்பாளர் நியமிக்கப்பட வேண்டி இருப்பின் குறித்த அந்நியமனம்.

**2. எதிராளிக்கு அறிவித்தல்**

பதிவாளர் ஆற்றுப்படுத்துகை கிடைக்கப்பெற்று 5 வேலை நாட்களுக்குள் அது பற்றிய எழுத்துமூல அறிவித்தலை நடுத்தீர்ப்புக்கு ஆற்றுப்படுத்தும் எழுத்துமூலமான வேண்டுகோள் மற்றும் அதனோடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இணைந்த ஏனைய ஆவணங்களுடன் சேர்த்து வழங்க வேண்டும். குறித்த அறிவித்தலானது பதிவுத்தபால் மூலம் அனுப்பப்பட வேண்டும் என்பதுடன், எதிராளி முரணாக நிரூபிக்காதவிடத்து, பதிவுத் தபாலில் அனுப்பியதிலிருந்து 3வது வேலை நாள் எதிராளியினால் பெற்றுக் கொள்ளப்பட்டதாகக் கருதப்படும்.

**3. பதில்:**

விதி 2 இன் கீழான அறிவித்தல் கிடைக்கப்பெற்று முப்பது (30) நாட்களுக்குள் எதிராளி பின்வரும் விடயங்களையும் குறிப்பிட்டு தனது பதிலை பதிவாளருக்கு சமர்ப்பித்தல் வேண்டும்.

(அ) ஆற்றுப்படுத்துகையில் கூறப்பட்ட கூற்றுக்களை ஏற்றுக் கொள்ளுதல் அல்லது மறுத்தல்.

(ஆ) அவரது எதிர்வாதம் மற்றும் எதிர்க்கோரிக்கை ஏதேனும் இருப்பின் அவற்றின் தன்மை மற்றும் சூழ்நிலைகள் பற்றிய ஒரு சுருக்கமான கூற்று.

(இ) நடுத்தீர்ப்புச் சட்டத்தின்கீழ் அனுமதிக்கப்பட்டதான ஏதேனும் ஆட்சேபணைகள்.

(ஈ) எதிராளியால் நடுத்தீர்ப்பாளர் நியமிக்கப்படவேண்டி இருப்பின் அந்நியமனம்.

மேலும், இவற்றின் பிரதியானது கோரிக்கையாளருக்கு அனுப்பப்பட்டு அதற்கான ஆதாரமும் பதிவாளருக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

**4. நடுத்தீர்ப்பாளரை நியமித்தல்.**

4.1 கோரிக்கையாளர் தனது ஆற்றுப்படுத்துகையில் ஒரு நடுத்தீர்ப்பாளரை, உடன்படிக்கையில் குறிப்பிடப்பட்ட ஏதேனும் தகைமைகள் அல்லது அடையாளங்கள் என்பவற்றுக்கமைவாக நியமிக்கலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4.2 எதிராளி தனது பதிலில் ஒரு நடுத்தீர்ப்பாளரை, உடன்படிக்கையில் குறிப்பிடப்பட்ட ஏதேனும் தகைமைகள் அல்லது அடையாளங்கள் என்பவற்றுக்கமைவாக நியமிக்கலாம்.

4.3 கோரிக்கையாளர் ஒரு நடுத்தீர்ப்பாளரை நியமித்து, ஆனால், எதிராளி மேற்குறிப்பிட்ட விதி 3 இல் ஏற்பாடு செய்தவாறு ஒரு நடுத்தீர்ப்பாளரை நியமிக்கத்தவறுமிடத்து, கோரிக்கையாளரால் நியமிக்கப்பட்ட நடுத்தீர்ப்பாளரே தனியொரு நடுத்தீர்ப்பாளராக இருப்பார்.

4.4 இரு திறத்தவர்களும் ஒவ்வொரு நடுத்தீர்ப்பாளரை நியமிக்குமிடத்து, அவ்விரு நடுத்தீர்ப்பாளர்களும் இணைந்து ஒரு மூன்றாவது நடுத்தீர்ப்பாளரை நியமிப்பார்கள். அவர் நடுத்தீர்ப்பு நியாயசபையின் தலைவராக செயற்படுவார்.

4.5.1 மேற்கூறப்பட்ட விதி 3 இன் கீழ் எதிராளியால் இரண்டாவது நடுத்தீர்ப்பாளர் நியமிக்கப்பட்ட நாளிலிருந்து முப்பது (30) நாட்களுக்குள் இரு நடுத்தீர்ப்பாளர்களும் மூன்றாவது நடுத்தீர்ப்பாளர் தொடர்பில் ஒரு உடன்பாட்டுக்கு வரத்தவறுமிடத்து, அகில இலங்கை இந்துமாமன்ற நம்பிக்கைப் பொறுப்பாளர்கள் சபையானது, (இதன்கீழ் சிலசமயம் "நியமிக்கும் அதிகாரசபை" என அழைக்கப்படும்) குறிப்பிட்ட முப்பது (30) நாட்கள் காலப்பகுதி முடிவடைந்து பதினைந்து (15) நாட்களுக்குள் ஒரு மேலதிக நடுத்தீர்ப்பாளரை நியமிக்க வேண்டும். அத்தகைய நியமனமானது திறத்தவர்களை கட்டுப்படுத்தும்.

4.5.2.1. குறிப்பிட்ட நம்பிக்கைப் பொறுப்பாளர்கள் சபையானது, குறிப்பிட்ட பதினைந்து (15) நாட்களுக்குள் அத்தகைய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நியமனத்தை செய்யத் தவறுமிடத்து, ஏதேனும் ஒரு திறத்தவர் தலைவரை நியமிப்பதற்காக, 1995ம் ஆண்டின் 11ம் இலக்க நடுத்தீர்ப்புச் சட்டத்துக்கு அமைவாக, நீதிமன்றத்துக்கு பொருத்தமான முறையில் விண்ணப்பம் செய்யலாம்.

4.5.2.2. அகில இலங்கை இந்துமாமன்ற நம்பிக்கைப் பொறுப்பாளர்கள் சபையின் எவரேனும் உறுப்பினர் குறித்த விடயத்தில் ஏதேனும் அக்கறைகள் தொடர்பான முரண்பாட்டை கொண்டிருப்பாராயின், அவர் குறித்த நியமனம் தொடர்பான ஏதேனும் தீர்மானத்தில் பங்குபற்ற முடியாது.

4.6 நடுத்தீர்ப்பாளர் ஒருவர் பதவி விலகினால் அல்லது இறந்தால் அல்லது நோய் காரணமாக தகைமையற்றவரானால் அவரை நியமித்த திறத்தவர் அல்லது நியமிக்கும் அதிகாரசபை அவரது வெற்றிடத்தை நிரப்புவார்.

4.7 நடுத்தீர்ப்பாளர்கள் தொடர்பில் இவ்விதிகளில் குறிப்பாக ஏற்பாடு செய்யப்படாத ஏதேனும் சந்தர்ப்பம் அல்லது சூழ்நிலை ஏற்படும் போது அவ் விடயமானது, பதிவாளரால் (திறத்தவர்களுக்கு அதுபற்றிய அறிவித்தலுடன்) அகில இலங்கை இந்துமாமன்ற நம்பிக்கைப் பொறுப்பாளர்கள் சபைக்கு அனுப்பப்படும். அவ்விடயம் தொடர்பில் குறித்த நம்பிக்கைப் பொறுப்பாளர்கள் சபையின் பொருள்கோடல் அல்லது தீர்மானமே இறுதியானதும் முடிவானதும் திறத்தவர்களை பிணிப்பதும் ஆகும். இவ்விதி 4.7 இன் கீழான நம்பிக்கைப் பொறுப்பாளர்கள் சபையின் ஏதேனும் தீர்மானத்துக்கு விதி 4.5.2.2 இன் ஏற்பாடுகள் பொருத்தமான ஏற்றமாற்றங்களுடன் பிரயோகமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 5. பிரதிநிதித்துவம்

ஒரு திறத்தவர் ஒரு சட்டத்தரணியால் அல்லது ஒரு சட்டத்தரணிகள் நிறுவனத்தால் பிரதிநிதித்துவப்படுத்தப்படலாம். அச்சட்டத்தரணிக்கு அல்லது சட்டத்தரணிகளுக்கு இதன் கீழ்க்காணும் அட்டவணை 2 இல் உள்ள மாதிரியின்படி திறத்தவர்களால் வழங்கப்பட்ட அதிகாரக் கடிதம் முதல் சந்தர்ப்பத்திலேயே பதிவாளரிடம் சமர்ப்பிக்கப்படும். அச்சட்டத்தரணிக்கு அல்லது சட்டத்தரணிகளுக்கு அந்த திறத்தவர் சார்பில் (சத்தியக்கடதாசி தவிர்ந்த) சகல ஆவணங்களிலும் கையொப்பமிடுவதற்கும் அத்திறத்தவருக்காக தோற்றுவதற்கு வேறு சட்டத்தரணிகளுக்கு அறிவுறுத்துவதற்கும் அதிகாரமுள்ளது.

## 6. நடபடிமுறை

6.1 நடுத்தீர்ப்பாளர்களின் நியமனம் நிறைவுபெற்றதும், (அவ்வாறு நிறைவுபெற்று பதினைந்து (15) நாட்கள் காலப்பகுதிக்குள்) பதிவாளர் நடுத்தீர்ப்பாளர்களுடன் கலந்தாலோசித்து நடுத்தீர்ப்பு விளக்கத்திற்கான முதலாவது திகதியை தீர்மானித்து அதுபற்றி திறத்தவர்களுக்கு அறிவிப்பதுடன் நடுத்தீர்ப்பாளர்களுக்கும் தெரியப்படுத்துவார்.

6.2 விளக்கத்திற்கான முதலாவது தினத்தில் நடுத்தீர்ப்பாளர்கள் பின்வரும் செயற்பாடுகளை மேற்கொள்ள வேண்டும்.

(அ) கோரிக்கையாளர் தனது சாட்சிகளுக்கான சகல சத்தியக் கடதாசிகளையும் அவர் தங்கி நிற்கும் ஆவணங்களின் உண்மைப் பிரதிகளையும் தாக்கல் செய்வதற்கான ஒரு இறுதித் திகதியைத் தீர்மானித்தல்.

(ஆ) எதிராளி தனது சாட்சிகளுக்கான சகல சத்தியக் கடதாசிகளையும் அவர் தங்கி நிற்கும் ஆவணங்களின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மைப் பிரதிகளையும் தாக்கல் செய்வதற்கான ஒரு திகதியை (மேற்குறிப்பிட்ட உபபிரிவு (அ) இல் தீர்மானிக்கப்பட்ட திகதியிலிருந்து ஆகக்குறைந்தது முப்பது (30) நாட்களின் பின்னரானதாக) தீர்மானித்தல்.

(இ) (i) எதிராளியால் அவரது பதிலில் ஏதேனும் எதிர்க்கோரிக்கை முன்வைக்கப்பட்டிருந்தால் மற்றும் / அல்லது,

(ii) எதிராளியால் உறுதியளிக்கப்பட்ட அல்லது சுமத்தப்பட்ட ஏதேனும் நிகழ்வு அல்லது விடயம் முரண்படுத்தப்பட வேண்டியுள்ளபோது,

மட்டும் கோரிக்கையாளர் தனது சாட்சிகளுக்கான மேலதிக சத்தியக்கடதாசிகளையும் அவர் தங்கி நிற்கும் ஆவணங்களின் உண்மைப் பிரதிகளையும் தாக்கல் செய்வதற்கு ஒரு மேலதிக திகதியை (மேற்குறிப்பிட்ட உபபிரிவு (ஆ) இல் தீர்மானிக்கப்பட்ட திகதியிலிருந்து ஆகக்குறைந்தது முப்பது (30) நாட்களின் பின்னரானதாக) தீர்மானித்தல்.

(ஈ) மேலே (அ) தொடக்கம் (இ) வரை தீர்மானிக்கப்பட்ட திகதிகள் முடிவடைந்த பின்னர் விடயத்தை குறிப்பிடுவதற்காக ஒரு திகதியைத் தீர்மானித்தல்.

(உ) மேலுள்ள உபபிரிவு (ஈ) இல் குறிப்பிட்ட திகதியில் திறத்தவர்களால் தாக்கல் செய்யப்பட்ட சத்தியக்கடதாசிகள் பரிசீலித்து நடுத்தீர்ப்பாளர்கள் பொருத்தமானதென கருதுமிடத்து குறுக்கு விசாரணை மற்றும் மீள விசாரணை செய்வதற்காக விளக்கத்திற்கென ஒரு திகதியைத் தீர்மானித்தல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6.3 விதி 6.2 இற்கமைய நடுத்தீர்ப்பாளர்களால் தீர்மானிக்கப்பட்ட காலப்பகுதியானது நடுத்தீர்ப்பாளர்களால் காலத்துக்காலம் அதிகரிக்கப்படலாம். ஒரு அதிகரிப்பானது முப்பது (30) நாட்களுக்கு மேற்படாதவாறு இருக்க வேண்டும்.

6.4 ஏதேனும் விடயம் அல்லது வினா தொடர்பில் எழுத்துமூல சமர்ப்பணங்களை சமர்ப்பிப்பதற்கு நடுத்தீர்ப்பாளர்கள் திறத்தவர்களுக்கு ஒரு சந்தர்ப்பம் வழங்கலாம்.

6.5 நடுத்தீர்ப்பாளர்கள் சான்றுக் கட்டளைச் சட்டத்தினால் கட்டுப்படுத்தப்படமாட்டார்கள். ஆனால், அவர்கள் தொழிநுட்ப விடயங்களில் அல்லாது சான்றுக் கட்டளைச் சட்டத்தில் கூறப்பட்டுள்ள விரிவான கொள்கைகளினால் வழிநடத்தப்படலாம்.

6.6 நடுத்தீர்ப்பாளர்களால் திறத்தவர்களின் சம்மதத்துடன் வேறுவகையில் தீர்மானிக்கப்பட்டாலன்றி, நடுத்தீர்ப்பு விளக்கத்திற்கான சகல அமர்வுகளும் அ.இ.இ.ந.நி. இனால் ஒழுங்கு செய்யப்பட்ட ஓர் இடத்தில் நடைபெறும்.

6.7 நடுத்தீர்ப்பாளர்கள் தமிழ்மொழியில் நடாத்தத் தீர்மானித்தாலன்றி, நடுத்தீர்ப்பு அமர்வுகள் யாவும் ஆங்கில மொழியில் நடாத்தப்படும்.

**7. நடுத்தீர்ப்பாளர்கள் குழாம்**

எவரேனும் ஆள் அ.இ.இ.ந.நி. இல் நடாத்தப்படவுள்ள ஏதேனும் நடுத்தீர்ப்பு அமர்வுகளில் நடுத்தீர்ப்பாளராக நியமிக்கப்படுவதற்கு நம்பிக்கைப் பொறுப்பாளர்கள் சபையினால் சிபார்சு செய்யப்பட்டால், அவ் ஆள் அ.இ.இ.ந.நி உடன் பதிவுசெய்யப்பட வேண்டும் என்பதுடன் பதிவாளர் அவரது பெயரை நடுத்தீர்ப்பாளர்கள் குழாமில் உள்ளடக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டும். ஒரு நடுத்தீர்ப்புக்கு எதிர்பார்க்கின்ற ஏதேனும் திறத்தவர் அல்லது அவரது சட்டத்தரணி ரகசியத் தன்மையைப் பேணுவதற்காக ஒரு எழுத்துமூல விண்ணப்பத்தை (சபையால் விதித்துரைக்கப்பட்ட படிவத்தில்) பதிவாளருக்குச் செய்வதன் மூலம் நடுத்தீர்ப்பாளர்களின் பெயர்களையும், அவர்களால் எதிர்பார்க்கப்படும் கட்டணத்தையும் கொண்ட நடுத்தீர்ப்பாளர்கள் குழாமின் பட்டியலை பரிசீலிக்க முடியும். தகுதிவாய்ந்த நீதிமன்றத்தால் ஒரு கட்டளை வழங்கப்பட்டாலன்றி வேறுவகையில் அகில இலங்கை இந்துமாமன்ற நம்பிக்கைப் பொறுப்பாளர்கள் சபையானது நடுத்தீர்ப்பாளர்கள் குழாமின் பட்டியலை வெளியிடுவதற்கு அல்லது காட்சிப்படுத்துவதற்கு மறுக்கலாம். ஒரு நடுத்தீர்ப்பின் எத் திறத்தவரும் குறிப்பிட்ட நடுத்தீர்ப்பாளர்கள் குழாமிலிருந்து மட்டும் நடுத்தீர்ப்பாளரை நியமிப்பதற்கு கட்டுப்படுத்தப்படவில்லை. எவ்வாறாயினும், அகில இலங்கை இந்துமாமன்ற நம்பிக்கைப் பொறுப்பாளர்கள் சபையானது நியமிக்கும் அதிகாரசபையாக உள்ள போது குறித்த சபையானது குறித்த குழாமிலுள்ள நடுத்தீர்ப்பாளர்களுக்கு முன்னுரிமை வழங்கலாம். ஆனால், குழாமில் பெயர் குறிப்பிடப்படாத ஒருவரை நடுத்தீர்ப்பாளராக நியமிப்பதற்கு சுதந்திரமுடையது.

**8. நிலையத்துக்கு செலுத்தப்படவேண்டிய கட்டணம்.**

அகில இலங்கை இந்துமாமன்ற நம்பிக்கைப் பொறுப்பாளர்கள் சபையினால் காலத்துக்குக் காலம் தீர்மானிக்கப்படவும் மாற்றப்படவும் கூடிய கட்டண அட்டவணை ஒன்றிற்கு அமைவாக கட்டணமானது, ஒவ்வொரு திறத்தவராலும் நிலையத்துக்கு செலுத்தப்பட வேண்டும் அல்லது வைப்பிலிடப்பட வேண்டும். குறித்த கட்டண அட்டவணையானது அ.இ.இ.ந.நி. அறிவித்தலில் காட்சிப்படுத்தப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பட்டிருக்கும் என்பதுடன் அதன் பிரதிகள் பதிவாளரிடம் வைத்திருக்கப்படும். எவ்வாறாயினும், அ.இ.இ.ந.நி. இனால் மேற்கொள்ளப்பட்ட சகல செலவுகளும் திறத்தவர்களால் மீள்செலுத்தப்பட வேண்டும் என்பதுடன் அ.இ.இ.ந.நி. காலத்துக்குக் காலம் தீர்மானிக்கும் முறையில், செலவுகளை ஈடுசெய்வதற்காகத் தேவைப்படுத்தப்படும் வைப்புகள் முன்கூட்டியே திறத்தவர்களால் வைப்புச் செய்யப்பட வேண்டும்.

**9. நடுத்தீர்ப்பாளருக்கு செலுத்தப்படவேண்டிய கட்டணம்.**

ஒரு நடுத்தீர்ப்பில் நடுத்தீர்ப்பாளருக்கு செலுத்தப்படவேண்டிய கட்டணமானது, ஒவ்வொரு திறத்தவராலும் சம்பந்தப்பட்ட நடுத்தீர்ப்பாளரின் நெறிப்படுத்தலுக்கமைய நிலையத்துடன் வைப்பிலிடப்பட வேண்டும்.

**10. தீர்வு**

நடுத்தீர்ப்பாளர்கள் விரைவாக தமது தீர்வை வழங்க வேண்டும் என்பதுடன், நடுத்தீர்ப்பாளர்களுக்கு ஏதேனும் கட்டணம் செலுத்தப்படவேண்டி இருப்பின், தீர்வின் மூடப்பட்ட பிரதி ஒன்றானது பதிவாளரிடம் வைத்திருக்கப்பட்டு சம்பந்தப்பட்ட திறத்தவர்களுக்கு நடுத்தீர்ப்பாளர்களின் கட்டளைப்படி வழங்கப்படும்.

**11. விலக்களிப்பு**

அ.இ.இ.ந.நி. இன் சார்பில் ஏதேனும் தன்னிச்சையான பிறழ்நடத்தை அல்லது தனிப்பட்ட கவனயீனம் ஏதாவது இருந்தாலன்றி வேறுவகையில் ஒரு நடுத்தீர்ப்பாளரின் செயலுக்கு அல்லது செய்யாமைக்கு எத்திறத்தவருக்கும் அ.இ.இ.ந.நி ஆனது வகைசொல்லவோ அல்லது பொறுப்பாகவோ மாட்டாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மேற்குறிப்பிடப்பட்ட அட்டவணை 1

இவ் ஒப்பந்தம் உடன்படிக்கை அல்லது அரசியல் யாப்பிலிருந்து எழுகின்ற அல்லது இது சம்பந்தமான அல்லது இதன் தொடர்ச்சியான, இதனது ஏதேனும் நியதி அல்லது நிபந்தனைகளின் பிணக்கு, மீறல், முடிவுறுத்தல் அல்லது வலிதாகும் தன்மை பற்றிய முரண்பாடு அல்லது கோரிக்கை என்பவை உள்ளடங்கலாக 1995ம் ஆண்டின் 11ம் இலக்க நடுத்தீர்ப்புச் சட்டத்தால் வரையறுக்கப்பட்டவாறான ஏதேனும் பிணக்கானது, நடுத்தீர்ப்புக்கு ஆற்றுப்படுத்தும் அத்திகதியில் உள்ளவாறான அகில இலங்கை இந்துமாமன்ற நடுத்தீர்ப்புக்கு நிலையத்தின் விதிகளுக்கு ("அ.இ.இ.ந.நி. நடுத்தீர்ப்பு விதிகள்") அமைவாக நடுத்தீர்ப்பின் மூலம் தீர்க்கப்படும்.

திறத்தவர்கள் பின்வரும் விடயங்களை சேர்த்துக்கொள்வது பற்றி கருத்திலெடுக்கலாம்.

1) நடுத்தீர்ப்பாளர்களின் தகைமையானது ....................................

2) நடுத்தீர்ப்பாளர்களின் எண்ணிக்கையானது நியமிக்கும் அதிகாரசபையால் நியமிக்கப்படும்போது ஒன்று அல்லது மூன்று.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விதி 5 இல் குறிப்பிடப்பட்ட அட்டவணை 2[xx]

இத்தாற் சகலருமறிக ........................................................................................ ஐச் சேர்ந்த .................................................................................. ஆகிய நான்/நாம் இலங்கைச் சனநாயக சோஷலிஸக் குடியரசின் உயர் நீதிமன்ற சட்டத்தரணி ................................................. அவர்களை எனது/எமது உண்மையானதும் சட்டபூர்வமானதுமான சட்டத்தரணியாக நியமனம் செய்து எனது/எமது சார்பில் எனது/எமது பெயரிலும் எனக்காகவும்/எமக்காகவும் நடுத்தீர்ப்பாளர்கள் முன் தோற்றவும் சகல விண்ணப்பங்களையும் மேற்கொள்ளவும் சகல ஆவணங்களையும் தாக்கல் செய்யவும் அதிகாரம் அளிக்கின்றேன்/ அளிக்கின்றோம்.

மேலும், எனது/எமது சட்டத்தரணி/சட்டத்தரணிகள் சகல சட்டபூர்வமான வழிகளையும் முறைகளையும் பின்பற்றுவதற்கும் நான்/நாம் நேரடியாக தோன்றியிருப்பின் இவ்விடயத்தில் சட்டபூர்வமாக மேற்கொண்டிருக்கக்கூடிய தேவையான சகல விடயங்களையும் நடவடிக்கைகளையும் மேற்கொள்வதற்கும் நான்/நாம் எனது/எமது சட்டத்தரணிக்கு/சட்டத்தரணிகளுக்கு அதிகாரம் அளிக்கின்றேன்/அளிக்கின்றோம். மேலும், அனைத்து வகையான குறைபாடுகளை நிவர்த்தி பண்ணவும் எனது/எமது சட்டத்தரணி/சட்டத்தரணிகள் இவ்விடயம் தொடர்பில் மேற்கொள்ளும் சகல நடவடிக்கைகளையும் அனுமதிக்கவும் சீராக்கவும் உறுதி அளிக்கின்றேன்/ அளிக்கின்றோம்.

இதற்கத்தாட்சியாக நான்/நாம் ........................ம் ஆண்டு ..................ம் மாதம் .................ம் திகதி ............................................................... என்னும் இடத்திலிருந்து கையொப்பமிடுகிறேன்/கிறோம்.

சகல கட்டளைகள் அறிவித்தல்களையும் வழங்குவதற்கான குறித்த சட்டத்தரணியின்/ சட்டத்தரணிகளின் முகவரி மற்றும் தொலைபேசி இலக்கம் வருமாறு:

..................................................

கையொப்பம்

XX - **இம் மாதிரியானது பொருத்தமான மாற்றங்களுடன் பாவிக்கப்படலாம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

A.C.H.C கட்டிடம் (5ம் மாடி). 91/5, சேர் சிற்றம்பலம் ஏ.கார்டினர் மாவத்தை.
கொழும்பு - 2. இலங்கை

**A.C.H.C Bldg. (5th Floor), 91/5, Sir Chittamplam A.Gardiner Mawatha,**

**Colombo - 02, Sri Lanka.**

**Telephone :** 011-2434990 **Fax:** 011-2344720

**Web:** www.hinducongress.org, **E-mail :** hinducongress@gamil.com

*Printed By : Global Graphics, #14, 57th Lane, Wellawatte, Colombo - 06. Tele: 011-2360678*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org